முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மச்சமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

23.05.2019, வியாழக்கிழமை

1. **ஏழாம் படை வீடு கொண்டுமே**
**ஏழைகளை காக்க மீட்க**
**காலனை விரட்டி மக்களுக்கு**
**கலியிலும் மரணமிலா வாழ்வு தர**
2. வாழ்வு தர வந்தநல் அரங்கா
வள்ளலே வாழும் ஞானியே
ஊழ் வென்று காத்திடும் குருவே
உயர் ஆசானே உன் பெருமை கூறி
3. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
குறையிலா **விகாரி விடை திங்கள்**
**தெரியவே நவதிகதி குருவாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 9ம் நாள் 23.05.2019, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு மச்சமுனிவர் யானும்**
4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வு பெற உத்தியோக நலமுற
ஞானமுடன் செல்வ சகல வளம்
நல் மன்றல் நற்குடி சிறப்பு காண
5. காணவே ஞானமுள்ள புத்திரம்
கண்ணியமான வளர்ப்பு பெருமை
தானதரும குணம் தயவு கூட
தக்க உயர் மக்களாய் சிறக்க
6. சிறக்கவே கலிவாழ் மக்களே
செந்தில்வேலன் சக்தியுமான
மறுக்கவிலா ஞானகுருவான
மகான் அரங்கன் திருவடி காண
7. காணவே பிரணவக்குடில் கண்டு
கணக்காய் முழுமதி காலம் தன்னில்
ஞானச்சுடராக அருளுகின்ற
ஞானியரிடம் திருவடி தீட்சைதனை
8. தன்னையே உலகோர் அடைந்து
தவசியரின் கொள்கைபடி நடக்க
அண்ணலே என வேண்டியே
அனுதினம் செபதபம் காண
9. காணவே வாழ்வினில் மாற்றம்
கருமவினை போக்கும் வழிதரும்
தானதருமம் எனும் அன்னதானம்
தடைபடா உலகினில் செய்து வர

10. வருகவே கலியுக மக்களுக்கு
வாழ்வினில் சகல வழிகளிலும்
ஆறுதலும் நல்ல பாதுகாப்பும்
ஆறுமுகப் பெருமான் துணையும் உருவாகும்

11. ஆகவே பிரணவக்குடில் வர
அனைத்து வெற்றியும் கண்டு
யுகத்தார் பெருவாழ்வு காண்பர்
உரைத்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மச்சமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

ஆறுபடை வீடுகளுக்கு மேலாய் சர்வ வல்லமையுடன் ஏழாம் படை வீடாய் துறையூர் ஓங்காரக்குடிலை அமைத்து உலகினில் துன்புறும் ஏழைகளை காத்திடவும் அவர்களை துன்பங்களில் இருந்து மீட்டிடவும் காலனாம் எமனையும் விரட்டி மக்களுக்கு கலியுகத்திலும் மரணமிலாப் பெருவாழ்வு தந்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 9ம் நாள் 23.05.2019, வியாழக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே மச்சமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மச்சமுனிவர்.

உலகினில் உள்ள அவரவரும் அவர்களது தொழில் உயர்வு பெறவும், உத்தியோகத்தில் நல்ல நிலையை அடையவும், தொழிலிலும் உத்தியோகத்திலும் சிறப்பறிவும், சகலவிதமான வளங்களையும் செல்வ வளத்தையும் பெற்று சிறப்படையவும், நல்ல வரன் அமைந்து திருமண தடைகள் நீங்கி திருமணம் நடந்திடவும், நற்குடி சிறப்புகளை காணவும், ஞானமுள்ள புத்திரபாக்கியம் அமைந்திடவும், பிள்ளைகளெல்லாம் நன்மக்களாய் கண்ணியத்துடன் வளர்ந்து வாழ்ந்திடவும், குடும்ப பெருமை பெருகவும், தானதரும குணம் பெருகி வாழ்வினில் தயவு பெருகி சமுதாயத்தில் உயர் மக்களாய் சிறப்புடன் வாழ்ந்திடவும் கலியுக மக்களே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக உள்ள அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை பயபக்தியுடன் வணங்கிட அவரவரும் ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து அரங்கரின் கமலமலர் பொற்பாதங்களில் பணிந்து அரங்கன் உலக நலன் கருதி பிரதி மாதந்தோறும் பௌர்ணமி தினத்தினிலே செய்கின்ற சிறப்பு ஞானியர் வழிபாடுகளிலே கலந்து கொண்டு ஞானச்சுடராக வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற அரங்கமகானிடத்து திருவடி தீட்சை உபதேசம் அடைந்து அரங்கரின் அருளாசிகளை பெற வேண்டும்.

அரங்கரிடத்து திருவடி தீட்சைகளை பெற்று ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலகம் கடைத்தேறிட ஞானபலம் பெற அருளிய தூயநெறிக் கொள்கைகளை மறுக்காமல் ஏற்றுக் கொண்டு உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு அரங்கரின் கொள்கைகளை பின்பற்றி நடந்து அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிகனே முருகப்பெருமானே என மனம் உருகி வேண்டுகோள் வைத்து தினம்தினம் மறவாமல் அரங்கரின் நாமங்களை ஜெபித்து வர வேண்டும்.

இவ்விதமே தொடர்ந்து செயல்பட, அவரவரின் வாழ்வினிலே நல்ல மாற்றங்கள் உருவாகிடும். அவரவரின் கருமவினைகளை போக்கிட வழிவகை செய்யும் தானதருமமாகிய அன்னதானத்தினை தடையின்றி உலகினில் செய்து வர வேண்டும். இவ்விதமே செய்து வர கலியுக மக்களுக்கு அவரவரின் வாழ்வினில் சகலவழிகளிலும் ஆறுதலும் நல்ல பாதுகாப்பும் முருகப்பெருமானின் துணையும் உண்டாகும்.

ஆகவே ஓங்காரக்குடிலினை நாடி வந்தவர்கள் எல்லாம், அனைத்து வகையிலும் வெற்றி கண்டு உலகோர் பெறுதற்கரிய பெருவாழ்வை பெற்று சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் மச்சமுனிவர்.

–சுபம்–